# மத்ஹபுடைய இமாம்களின் பார்வையில் இமாம் ஜஉபர் சாதிக் நாயகம்

ஹுஜ்ஜதுல் இஸ்லாம்
ஷெய்க் முஹம்மது றிஸா நூருல்லாஹியான்
தலைவர், இஸ்லாமிய கலாநிலையங்களுக்கான சர்வதேச மன்றம்

بسم الله الرحمن الرحيم

ஷாபியீ மத்ஹபின் ஸ்தாபகரானஇமாம் ஷாபியீ அவர்களையும் ஜஉபரீ மத்ஹபினைத் தோற்றுவித்த இமாம் ஜஉபர் சாதிக் அவர்களையும் பற்றிய ஆதாரபூர்வமான சுருக்கமான அறிமுகமொன்றைப் பெற்றுக் கொண்டு அவ்விரு பெரியார்களுடைய சிந்தனைப் போக்கு மற்றும் பிக்ஹ் ரீதியான கருத்துக்கள் சம்பந்தமாக ஒப்பீடு செய்வதையும் எனது தலைப்பாகக் கொண்டுள்ளேன்.

இமாம் முஹம்மத் இப்னு இத்ரீஸ் ஷாபியீ அவர்கள் நபிகளாரின் சஹாபாக்களில் ஒருவராகிய ஷாபிஉ இப்னு சாஇப் என்பவரின் நான்காவது தலைமுறை ஆவார். அன்னாரது தாயார் பாத்திமா பின்த் அப்துல்லாஹ் இப்னு ஹஸன் இப்னு ஹுஸைன் இப்னு அலீ அலைஹிஸ் ஸலாம் ஆவார். அதாவது தாய் வழியில் நான்காவது தலைமுறையில் அன்னை பாத்திமா நாயகியைச் சென்றடைகிறார். கிழக்கு சிரியாவில் காஸாவில் ஹிஜ்ரி 150ம் ஆண்டு பிறந்தார். தமது 54வது வயதில் வபாத்தாகிய அன்னாரின் அடக்கஸ்தலம் எகிப்தில் இன்றும் அன்னாரின் நேசர்களால் தரிசிக்கப்பட்டு வருகிறது.

அன்னார் பல்வேறு தேசங்களுக்கும் பிரயாணம் மேற்கொண்டார். மதீனா, யமன் மற்றும் பக்தாத் போன்ற இன்னோரன்ன நாடுகளுக்கு அவர் மேற்கொண்ட பிரயாணங்கள், அன்னாரது பரந்த நோக்குக்குப் பின்னணியாக அமைந்தன. அத்தோடு இஸ்லாமிய சட்டம் உள்ளாந்த பல்வேறு துறைகளில் அன்னார் சிறப்புத் தேர்ச்சி அடையவும் அவை காலாயின.

இன்று எகிப்து, பலஸ்தீன், குர்திஸ்தான், இந்த அழகிய சிறி லங்கா, யெமன், பிலிப்பீன், சிரியா, இந்தோனேசியா, மலேசியா, இந்தியா, சீனா, அவுஸ்திரேலியா போன்ற பல்வேறு நாடுகளில் ஷாபியீ மத்ஹபைப் பின்பற்றுவோர் செறிந்து வாழ்கின்றனர்.

அல் ஜதீத், அல் உம்மு, அல் ஆமாலீ அல் கபீரா, அல் இம்லா, அத்தஹீரா, அர்ரிஸாலா முதலிய அன்னாரின் நூல்கள் இன்றும் ஆய்வாளர்களைத் திக்குமுக்காட வைக்கின்றவை.

நபிகள் பெருமானாரின் புனித குடும்பத்தினர் மீது பேரன்பு கொண்டிருந்த அன்னார், அதனை வெளிப்படுத்தும் விதத்தில் பாடிய உணர்ச்சிக் காவியங்கள் பல அன்னாரது தீவான் எனப்படும் கவிதைத் தொகுப்பில் காணப்படுகின்றன. அதில் ஒரு கவிதையில் இவ்வாறு பாடுகிறார்:[1]

முஹம்மதின் குடும்பத்தை நேசிப்பது
ராபிழிய வழமை என்றால்
மனு ஜின்கள் சாட்சியாக என்னை
ராபிழீ என்றே சொல்லுங்கள்.

அலீயை, பாதிமாவை, நபிப் பேரரை
அன்பாய்ப் புகழ்வதைக் கண்டவர்கள்
இது வழிகெட்டோர் வழக்கமென்று
வாய்நிறையச் சொல்வாரெனில்,
பாத்திமாவை நேசிப்பதை வழிகேடென
வழங்குவோரில் இருந்து விலகிக் கொண்டேன்.

இமாம் ஷாபியீ அவர்களின் சட்ட விளக்கங்கள் மட்டுமன்றி சிந்தனையிலும் கோட்பாடுகளிலும் ஜஉபரீ மத்ஹபின் ஸ்தாபகர் இமாம் ஜஉபர் சாதிக் அவர்களின் கருத்துக்களோடு மிக நெருக்கமான கருத்துக்களைக் கொண்டிருந்தார்கள். இது சம்பந்தமாக சில குறிப்புகளை உங்கள் முன்வைக்க விரும்புகிறேன்.

இமாம் ஜஉபர் சாதிக் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மறைவுக்கு ஓராண்டுக்குப் பிறகு காஸாவில் பிறந்த இமாம் ஷாபியீ அவர்களுக்கு இமாம் ஜஉபர் சாதிகைக் காணுகின்ற வாய்ப்பு கிடைக்கவில்லை. அது சாத்தியமும் இல்லை.

ஆயினும் அன்னாரின் சிஷ்யர்களிடம் பிக்ஹ், மெஞ்ஞானம் மற்றும் ஏனைய இஸ்லாமியக் கலைகளையும் மதீனா மற்றும் இராக் போன்ற தேசங்களுக்குச் சென்று கற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. அத்தகைய இருவரை முக்கியமாகக் குறிப்பிடலாம். இமாம் சாதிக்கின் சிஷ்யர்களும் இரண்டு பெரும் மத்ஹபுகளின் ஸ்தாபகர்களுமான இமாம் மாலிக்கிடம் நேரடியாகவும் இமாம் அபூஹனீபாவின் சிஷ்யரிடமும் கல்வி கற்றார். இமாம் ஷாபியின் அறிவுசார் ஆளுமையை வடிவமைப்பதில் இவ்விரு பேரறிஞர்களும் மிகப் பெரும் செல்வாக்குச் செலுத்தினர்.

---

[1] *தப்சூர் அல் ஆலூஸீ, பாகம் 18, பக்கம் 264 மற்றும் தப்சீர் அல் ராஸீ பாகம் 13 பக்கம் 433*

எமன் தேசத்துக்குச் சென்ற போது இமாம் யஹ்யாவின் பாசறையில் கல்வி கற்றார். இமாம் யஹ்யா ஸைதீ சீயா அறிஞர் ஆவார்.

நாற்பெரும் மத்ஹபுகளும் அடிப்படையில் இமாம் சாதிக்கின் பிக்ஹையே அடிப்படையாகக் கொண்டவை என இப்னு அபில் ஹதீத் மு.்.தஸிலீ ஷாபியீ குறிப்பிடும் கருத்து நன்கு ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். எனவே தான் எகிப்தின் பிரபல சமய அரசியல் ஞானியான ஜனாதிபதி ஆவோசகராகவும் கடமையாற்றிய அப்துல் ஹலீம் ஜுந்தீ அவர்களின் பின்வரும் கூற்றை இங்கு எடுத்தாள விரும்புகிறேன்.

அவர் இவ்வாறு எழுதுகிறார்: "இமாம் சாதிக் (அ) அவர்களிடம் கல்வி பயின்ற பல சிஷ்யர்கள் பிற்காலத்தில் தாமாகவே சிஷ்யர்களைப் பயிற்றுவிக்கும் தகுதி பெற்ற பேரறிஞர்களாக மாறினார்கள். இமாம் அபூஹனீபா மற்றும் இமாம் மாலிக் ஆகியோர் இமாம் சாதிக்கிடம் ஞானங்களைப் பயிள்றனர். இமாம் மாலிக்கிடம் பல வருடங்கள் இமாம் ஷாபியீ மாணவனாக இருந்து அறிவு பெற்றார். இமாம் அஹ்மதிப்னு ஹம்பல் கூட பத்து வருடங்கள் இமாம் மாலிக்கிடம் கல்வி பயின்றார்."

நாற்பெரும் மத்ஹபுகளின் இமாம்களும் ஒன்றில் நேரடியாக இமாம் சாதிக்கிடம் கல்வி கற்றார்கள் அல்லது இமாம் சாதிக்கிடம் நேரடியாகப் பயின்றோரிடம் ஞானம் பெற்றார்கள். அத்தகைய பெரும் சிறப்பைப் பெற்ற இமாம் ஜஉபர் சாதிக் (அ) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி சுருக்கமாக இங்கு நோக்குவது அவசியமெனக் கருதுகிறேன்.

## இமாம் ஜஉபர் இப்னு முஹம்மத் அஸ்ஸாதிக் (அ)

அஹ்லுல் பைத் இமாம்களின் வரிசையில் ஆறாவது இமாமாகிய அன்னார் நபிகளாரிள் புதல்வி அன்னை பாத்திமாவின் வழியில் ஹி.80ம் ஆண்டு மதீனாவில் அன்னாரது தந்தை இமாம் முஹம்மத் பாக்கிரின் வீட்டில் பிறந்தார்கள். அன்னாரின் தாயார் அன்னை பாத்திமா பின்த் காசிம் இப்னு முஹம்மத் இப்னு அபூபக்ர் உம்மு பர்வா ஆவார். தம் வாணாளில் 12 ஆண்டுகளை தம் பாட்டனார் சைனுல் ஆபிதீனிடமும் அதனையடுத்த 19 ஆண்டுகளை தமது தந்தை இமாம் பாக்கிருடனும் கழித்த அன்னார் ஹி.149இல் உலகைப் பிரிந்ததார்கள்.

அறிவிலும் ஞானத்திலும் அன்னார் அடைந்திருநத உயரிய அந்தஸ்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், தப்ஸீர் கபீரின் ஆசிரியர் சூரா அலகவ்தருக்கு விளக்கம் எழுதுகையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "நபிகளாரின் பரம்பரையினர் மத்தியில் எத்தகைய அறிவுக் கடல்கள் இருக்கின்றனர் என்று பாருங்கள். இமாம்களான

பாக்கிர், காழிம், சாதிக், றிழா (அ) ஆகியோர் போதுமான உதாரணங்கள்.''

குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் நபிகளாரின் குடும்பத்தினர் மீது அளப்பரிய நேசம் கொண்டிருந்ததன் காரணமாக இமாம் அபூஹனீபா மற்றும் இமாம் ஷாபியீ போன்றோர் மீது ஷீயா முத்திரை கூட குத்தப்பட்டிருந்தமையாகும்.

இமாம் ஷாபியீ, இமாம் அபூஹனீபா, இமாம் சாதிக் ஆகியோர் பல்லாயிரம் ஹதீஸ்களை றிவாயத் செய்தனர். சிஹாஹுஸ் ஸித்தா கிரந்தங்களில் அவர்களது றிவாயத்துகள் குறிப்பிடப்பட்டிருப்பதாகக் கொண்டாலும் கூட இமாம் முஹம்மத் இப்னு இஸ்மாயீல் புஹாரி அவர்களின் ஸஹீஹுல் புஹாரி கிரந்தத்தில் இம்மூன்று மகான்களினதும் றிவாயத் ஒன்றாவது இடம்பெறாமை விந்தைக்குரியதாகும். உண்மையில் இமாம் புஹாரி தவறுதலாக அல்லது மறதியில் இவர்களின் றிவாயத்துகளைச் சேர்க்காமல் விட்டுவிட்டாரா அல்லது புறச் சக்தியொன்றின் தணிக்கைக்கு ஆளாக்கப்பட்டதா என்பது புரியவில்லை.

இமாம் அபூஹனீபா பற்றி இமாம் ஷாபியீ சொல்லும் போது அன்னாரின் பிக்ஹ், மக்களுக்கு இன்றியமையாதது என்கிறார். அத்தகைய இமாம் அபூஹனீபா இமாம் சாதிக்கைப் பற்றி என்ன கூறுகிறார் தெரியுமா? ''நான் சந்தித்தவர்கள் அனைவரிலும் பார்க்க அதிகளவு ஞானமும் அறிவும் கொண்டவர். பிரமாண்டமான ஆட்சியதிகாரச் செழிப்பில் இருந்த மன்சூர் மீது உண்டாகும் கண்ணியத்தை விட இமாம் சாதிக் மீதான, ஒப்பிட முடியாத கண்ணியம் என் உள்ளத்தை ஆட்கொண்டது.''[1]

மன்னர் மன்சூர் ஏற்பாடு செய்த ஒரு கருத்தரங்கில் இமாம் அபூஹனீபா நாற்பது மஸ்அலாக்களை இமாம் ஜஉபர் சாதிக்கிடம் முன்வைத்தார். அவை உவ்வொன்றுக்கும் பதிலளித்த இமாம், 'இது சம்பந்தமான உங்கள் கருத்து இது, மதீனா அறிஞர்களின் கருத்து இவ்வாறு, அஹ்லுல் பைத்தினரான நமது நிலைப்பாடு இது. . .' என்று விபரித்து விளக்கம் தந்தார்கள்.[2]

கருத்தரங்கு இறுதியில் இமாம் அபூஹனீபா சொல்கிறார்கள்: ''நிச்சயமாக மக்களில் பெரும் அறிஞர் யாரெனில் மக்கள் மத்தியில் உள்ள வித்தியாசமான கருத்துக்களை அறிந்தவராவார்.''

---

[1] கிதாபுல் மவ்ஸூஆ அல் பிக்ஹிய்யா அல் முயஸ்ஸரா பக்..32, கிதாபுல் அர்பயீன் பக்.310

[2] கிதாபுல் மவ்ஸூஆ அல் பிக்ஹிய்யா அல் முயஸ்ஸரா பக்..34, இமாம் சாதிக் வல் மதாஹிபுல் அர்பஆ பாகம் 1, பக்.353 மற்றும் வுழூஉன் னபி பாகம் 1 பக்.350 இல் இருந்து எடுத்தாளப்பட்டது.

## இமாம் மாலிக்

இமாம் மாலிக் இவ்வாறு கூறுகிறார்: "நான் அடிக்கடி இமாம் ஜஉபர் இப்னு முஹம்மதிடம் ஏதும் கற்றுக் கொள்வதற்காககப் போய் வருவது வழக்கம். அவர் எப்போதும் புன்னகைத்தவராகவும் மகிழ்ச்சியூட்டுபவராகவும் திகழ்ந்நதார்கள்.[1] பெருமானார் பற்றிக் குறிப்பிட்டால் அவர் முகபாவம் மாறிவிடும். நான் பல காலம் அவரிடம் சென்று வந்தேன். எப்போது போனாலும் அவர் ஒன்றில் தொழுதுகொண்டிருப்பார் அல்லது நோன்பு வைத்திருப்பார் அல்லது திருக் குர்ஆனை ஓதிக்கொண்டிருப்பார். தனக்கு சம்பந்தமில்லாதவை பற்றி அவர் பேச மாட்டார். நபிகளாரைப் பற்றி அவர் பேச முற்பட்டால் வுளூவுடன் அன்றி பேச மாட்டார். அன்னார் இறையச்சம் மேலிட்ட பற்றற்ற வாழ்க்கை வாழ்ந்த ஒரு பேரறிஞர் ஆவார். நான் அவரிடத்தில் போகும் போதெல்லாம் அவர் சாய்ந்துகொண்டிருக்கும் தலையணையை நான் சாய்ந்திருப்பதற்காக ஏற்பாடு செய்வார்."[2]

பிறிதோரிடத்தில் இமாம் மாலிக் இப்னு அனஸ் கூறுகின்றார்:[3]

ஒரு முறை இமாம் சாதிக் (அ) அவர்களுடன் ஹஜ் பயணம் செல்லும் வாய்ப்புக் கிட்டியது. தாம் பிரயாணித்த பிராணியின் மீது இருந்து கொண்டே இஹ்ராம் அணியத் தொடங்கினார். அதற்காக லப்பைக்க சொல்ல அவர் முயன்ற போதிலும் அவரது அதைத்துக் கொண்டது, மூச்சுத் திணறிது. பிராணியின் மேலிருந்து கீழே விழுந்து விடுவாரோ என்று நாம் அஞ்சினோம்.

"நபியின் புதல்வரே, தங்களுக்கு என்னவாயிற்று. லப்பைக் கூறுங்கள்."

"லப்பைக் கூறுவதற்கு எனக்கு என்ன தைரியம் இருக்கிறது. உன்னை நான் பொருந்திக் கொள்ளவில்லை என அல்லாஹ் பதில் தந்தால் என் நிலைமை என்னவாகும்."

இந்த ஹஜ் பிரயாணத்தின் போது தான் இமாம் மாலிக் ஹஜ் சம்பந்தமான அனைத்து சட்ட விதிமுறைகளையும் இமாம் சாதிகிடமிருந்து கற்றுக் கொள்கிறார்.

நபிகளாரின் ஒட்டகை ஓட்டுநராக இருந்து நீண்ட காலம் உயிர் வாழ்ந்த பெரும் சஹாபி ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் அன்சாரீ ஹஜ்ஜதுல் விதாவின் போது தாம் நபியிடம் கண்டு கற்றுக் கொண்ட ஹஜ் விதிமுறைகளை அன்னாருக்கு விளக்கியிருந்தார்.

---

[1] *கிதாப் ஷரஹு இஹ்காகுல் ஹக், மர்அஷீ பாகம் 12, பக்.235*

[2] *கிதாபுல் மவ்ஸூஆ அல் பிக்ஹிய்யா அல் முயஸ்ஸரா பக்..33, இப்னு அபதில் பர், அத்தம்ஹீத் பாகம்2, பக்.67*

[3] *இலலுஷ் ஷராயிஉ, பாகம் 1, பக்.235*

இமாம் அபூஹனீபா மீண்டும் கூறுகிறார்:

ما رأيت أفقه من جعفر بن محمد و أنّه أعلم الأمه.

“இமாம் ஜஉபர் இப்னு முஹம்மதை விடவும் அறிவு ஞானம் பெற்ற எவரையும் நான் கண்டதில்லை. அன்னார் உம்மத்தினரில் அதியுயர் அறிஞராவார்.”[1]

துஹ்பத்து இஸ்னா அசரிய்யா எனும் நூலில் ஆலூஸீ குறிப்பிடுகிறார்: கண்ணியமும் சிறப்பும் மிக்க இமாம் அபூஹனீபா தெளிவாகக் கூறுகிறார்.

لو لا السنتان لهاك النعمان

‘’இமாம் ஜஉபரிடம் கற்ற அந்த இரண்டு ஆண்டுகள் இல்லையெனில் நு.ஃ.மான் அழிந்தார்.”[2]

இமாம் அபூஹனீபா இரண்டு ஆண்டுகளும் இமாம் மாலிக் பத்து ஆண்டுகளும் இமாம் சாதிக்கிடம் கல்வி பெற்றனர். இமாம் ஷாபியீ இமாம் மாலிக்கிடம் பத்து வருடங்கள் மாணவராக இருந்தார்.

இப்னு ஹஜர் அல்-அஸ்கலானி கூறுகிறார்: “அறிஞர்கள் இமாம் ஸாதிக்கிடம் இருந்து பல ஞானங்களை அறிவித்தார்கள். எந்தக் காலத்திலும் மனிதர்களைச் சென்றடையாதவை. ஆனால் அதன் ஒலி எட்டுத் திசையையும் சென்றடைந்தது.”[3] உமர் இப்னு மிக்தாம் கூறுகிறார். “இமாம் ஜஉபர் சாதிக் அவர்களைக் கண்ட போதே நபிமார்களின் பரம்பரையில் வந்துதித்தவர் என்பதைத் தெரிந்து கொண்டேன். ஜம்ராவில் அவர் நின்று கொண்டு ‘என்னிடம் கேளுங்கள், என்னிடம் கேளுங்கள்’ எனக் கூறிய வண்ணம் இருந்தார்.”[4]

தமது தந்தையாரின் அடிச்சுவட்டில் சென்று அறிவியல் மட்டும் கலாசார எழுச்சிச் செயற்பாட்டை முன்னெடுத்துச் சென்றார். பாரியதொரு இஸ்லாமிய அறிவியற் கூடத்தையும் ஞான பீடத்தையும் உருவாக்கினார். வஹி இறங்கிய தளமான மதீனா மாநகரம் அன்னாரது பல்கலைக்கழகமாக மாறியது. நபிகளாரின் பள்ளிவாசலான மஸ்ஜிதுன் னபி அன்னாரின் வகுப்பறையாகக் காணப்பட்டது. மாணாக்கர்கள் தாம் விரும்பிய துறைகளில் கல்வி பயின்றார்கள்.

பிக்ஹ், உசூல், வரலாறு, தத்துவஞானம், இல்முல் கலாம், தப்ஸீர் உட்பட வெவ்வேறு இஸ்லாமிய அறிவுத்துறைகளில் மாணாக்கர் கல்வி கற்றனர்.

---

[1] கிதாபுல் மவ்ஸூஆ அல் பிக்ஹிய்யா அல் முயஸ்ஸரா பக்..34

[2] ஷெய்க் தூஸீ, ஹிலா.ஃ.ப், பாகம் 1, பக். 33, கர்கீ, ஜாமிஉல் மகாஸித், பா.1, பக்.21

[3] கர்கீ, ஜாமிஉல் மகாஸித் பாகம்1 பக்.9, ஷரஹ் லும்ஆ பாகம் 1, பக்.29

[4] மஹ்வுஸ ஸுன்னா வ தத்வீனுஹா பக்.37, ஸியரு அ.ஃ.லாமின் னுபலா, தஹபீ பா 6, பக் 257

ஓர் சுவையான சம்பவத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அப்துல்லாஹ் தீஸானீ என்ற சிந்தீக், ஒரு முறை மதீனா நகருக்கு வந்தார். இமாம் சாதிக் அவர்களிடம் வந்து 'நான் உம்முடன் வாதம் புரிய வேண்டும்' என்றார். 'எது சம்பந்தமாக?' -இமாம் வினவினார். 'பிக்ஹ் சம்பந்தமாக' என்றார் தீஸானீ. இமாம் அவரை முஹம்மத் இப்னு முஸ்லிமிடம் அனுப்பி வைத்தார். அவரிடம் தர்க்கித்துத் தோல்வி கண்ட பின் இல்முல் கலாம் சம்பந்தமாக வாதிட வேண்டும் என்று கூறி மீண்டும் இமாமிடம் வந்தார். இமாம் இப்போது அவரை ஹிசாம் இப்னு ஹகமிடம் அனுப்பி வைத்தார். ஒவ்வொரு விடயத்திலும் அன்னார் ஒவ்வொரு மாணாக்கரிடம் அனுப்பி வைத்தார்.

அந்த சில வருடங்களில் மட்டும் சுமார் நான்காயிரத்துக்கும் மேற்பட்ட அறிஞர் பெருமக்களை இமாமின் பாசறை பயிற்றுவித்து உலகுக்குத் தந்தது. அவர்கள் அனைவரும் தமது அறிவுகளைப் பிறருக்குச் சொல்லும் போது 'இமாம் சாதிக் நம்மிடம் அறிவித்ததற்கிணங்க..' என்று சொல்லியே பாடம் கற்பித்தனர்.

இரசாயனவியலின் தந்தை எனப் போற்றப்படும் ஜாபிர் இப்னு ஹய்யான் தமது 'அல் அஹ்ஜார்' என்ற கிரந்தத்தின் முன்னுரையில் இமாமின் பெயரைக் குறிப்பிட்டு, இமாம் சாதிக் தான் தமது ஆசானாகவும் வழிகாட்டியாகவும் இருந்தார் எனக் கூறுகின்றார்.

இமாமின் கல்வி கற்ற சீடர்கள் மதீனாவைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்று. இராக், மிஸ்ர், குராசான், ஹிம்ஸ், சிரியா, ஹழ்ரமவ்த் போன்ற இன்னோரன்ன நாடுகளைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். அவர்கள் சீயாக்களாகவோ அல்லது ஜஉபரி மத்ஹபைப் பினபற்றுவோராகவோ இருக்கவும் இல்லை. ஹனபி மத்ஹபினதும் மாலிகி மத்ஹபினதும் ஸ்தாபகர்கள் அவர்கள் மத்தியில் இருந்தார்கள். தப்சீர் மற்றும் கிராஅத் கலைகளில் தேறிய அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்கள் பலர் அங்கு கற்றார்கள். இமாம் ரிழாவின் சமகாலத்தவரான ஹஸன் இப்னு அலீ வுஷ்ஷா என்பவர் கூறுகிறார்: "கூபா மஸ்ஜிதில் நான் சுமார் 900 ஷெய்குமார்களைக் கண்டேன். அவர்கள் ஒவ்வொருவரும் 'இமாம் ஜஉபர் இப்னு முஹம்மத் நமக்கு அறிவித்த பிரகாரம். . ' என அறிவித்துக் கொண்டிருந்தார்கள்."[1]

இமாம் அப்துல் ஹலீம் ஜுன்தீ கூறுகிறார்: "இமாம் சாதிக் இஸ்லாமிய ஞானங்களைப் பொறுத்தவரையில் இதயமாகத் திகழ்ந்தார்கள். அன்னார் குடும்ப அடிப்படையில் பெருமானாரையும் ஹஸ்ரத் அபூபக்ரையும் ஹஸ்ரத் அலீயையும் சென்றடைகிறார்கள். சமயத் தலைவராகத் திகழ்ந்நத அன்னார் இயற்கை விஞ்ஞானங்கள் பற்றிய அறிவுகளில் சமுத்திரமாக இருந்தார்கள்."

---

[1] *அஃயானுஷ் ஷீஆ பா 1, பக்.35, ஷஹீத், அல்மீஸான் ப.108*

அல்லாமா அஸீஸுல்லாஹ் அதாரிதீ நபிகளாரின் திருக் குடுபத்தினரின் ஹதீஸ்கள் மற்றும் றிவாயத்துகளை தொகுத்தெடுப்பதில் தம் வாணாளைச் செலவிட்டார். அவரது கூற்றின் படி ஏனைய அஹ்லுல் பைத் இமாம்களை விடவும் இமாம் சாதிக் அறிவித்த ஹதீஸ்களே அதிகமாகக் காணப்படுகின்றன. அன்னார் இவற்றை 24 பெரும் தொகுதிகளில் திரட்டியுள்ளார்.

அல்அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் தலைவராக இருந்த உஸ்தாத் செய்க் முஹம்மத் சல்தூத் அவர்கள் ஜாபரீ பிக்ஹின் அடிப்படையில் அமல் செய்வது பற்றி பூரண அனுமதியை வழங்கி தெளிவாக பத்வா வழங்கினார். இது சம்பந்தமாக அவர் கடுமையான விமர்சனங்களுக்கு ஆளான போது 'இந்த மத்ஹபின் சட்டங்கள் ஏனைய பல மத்ஹபுகளின் சட்டங்களை விட உயர்ந்நதவை' எனக் குறிப்பிட்டார்.[1]

தற்போது அல்அஸ்ஹர் பல்கலைக்கழகத்தில் சீயா மத்ஹபின் பிக்ஹைக் கற்றுக்கொடுப்பதற்கென தனியான பிரிவு அமைக்கப் பட்டுள்ளது. ஷெய்க் தப்ரீஸீயின் தப்ஸீரான மஜ்மஉல் பயான், அல்லாமா ஹில்லீயின் முக்தஸருன் னாபிஉ போன்ற நூலகள் அங்கு வெளியிடப்படுகின்றன. ஆசூரா வைபங்களுக்கு பூரண மரியாதை வழங்கப்படுகிறது. இமாம் சாதிக் அவர்களின் மருமகள் ஹஸ்ரத் நபீஸாவுடைய அடக்கஸ்தலம், இமாம் சாதிக்கின் பாட்டனாராகிய இமாம் ஹுஸைனின் தலை அடங்கப்பட்டதாகக் கூறப்படும் பள்ளிவாசல், இமாம் சாதிக்கின் மாமியார் ஹஸ்ரத் சைனபின் புனிதத்தலம் என்பன மரியாதைக்குரிய மற்றும் மக்கள் நிரம்பி வழியும் இடங்களாக மாறியுள்ளன.

மேற்படி செய்குல் அஸ்ஹர் அவர்களிடம் குர்திஸ்தானைச் சேர்ந்த அபுல் வபா சாபியீ விடுத்த கேள்வியொன்றுக்குப் பதில் கொடுக்கின்ற போது, எந்த முஸ்லிமும் தான் விரும்பிய மத்ஹபைப் பின்பற்றவும் விரும்பிய மத்ஹபுக்கு மாறிக் கொள்ளவும் பூரண சுதந்திரம் உடையவர் ஆவார் எனக் குறிப்பிடுகிறார். மேலும் நாற்பெரும் மத்ஹபுகளை மட்டும் தான் பின்பற்ற வேண்டும் என்ற அவசியம் கிடையாது. அஹ்லுஸ் ஸுன்னா மத்ஹபைச் சேர்ந்த ஒருவர் ஜாபரி மத்ஹபைத் தேர்ந்தெடுப்பதில் தப்பில்லை எனவும் தெரிவிக்கிறார். நான்கு மத்ஹபுகளை உருவாக்கிய பெரியார்கள் தாமாகவே முன்வந்து அறிவிலும் தக்வாவிலும் மிகச் சிறந்தவர் எனக் குறிப்பிடுகின்ற இமாம் சாதிக்கிடம் அறிவு ஞானம் கற்றமை இதற்குப் போதிய சான்றாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.[2]

---

[1] *கிதாபுல் மவ்ஸூஅதுல் பிக்ஹிய்யா அல்முயஸ்ஸரா பாகம் 2, பக்.229. ஸபீலுன்னஜாத் பீ ததிம்மதில் முராஜஆத் ப.111*
[2] *றிஸாலத்துல் இஸ்லாம் சஞ்சிகை இல.3,4 ஆண்டு 12*

ஜாபரீ மத்ஹப் ஞானங்களில் மூழ்கி முத்தெடுத்த இமாம் கொமெய்னி தமது இறுதி வசிய்யத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார். "நாம் ஜாபரீ மத்ஹபைச் சேர்ந்தவர்கள் என்பது நமக்குப் பெருமை தருவதாகும். அது கரை தெரியாத ஒரு கடல். இமாம் சாதிக் தந்த பாரம்பரியங்களுள் மிகச் சிறந்தது."

ஏற்கனவே முன்னர் குறிப்பிட்ட பிரகாரம் இமாம் சாதிக் அவர்களது அறிவிப்புகள் அடங்கிய 24 வால்யூம்களைக் கொண்ட பிரமாண்டமான தொகுப்பானது, தவ்ஹீத். மஆத், ஈமான் எனப் பல்துறை ஞானங்களையும் உள்ளடக்கியதாகும். அல்லாமா அஸீஸுல்லாஹ் அதாரிதீ தொகுத்துள்ள இவ்வரிய பொக்கிஷம் இமாமின் பிகஹ் மற்றும் சட்ட விளக்கங்களையும் உள்ளடக்கியது. ஆத்மஞான வெளிப்பாடாகவும் ஜாபரிய சியா இலக்கியத்தின் சிறப்பான வடிவமொன்றாகவும் கருதப்படுகின்ற ஆன்மீக உலகில் சிறகடிக்கச் செய்கின்ற பிரார்த்தனைகள் மட்டும் 1288 இமாம் சாதிக்கிடம் இருந்து கிடைத்ததாக இக்கலைக்களஞ்சியத்தில் தொகுக்கப்பட்டுள்ளது. இவை மட்டும் மொத்தம் 750 பக்கங்களில் இரண்டு வால்யூம்களில் தொகுக்கப்பட்டுள்ளன.

மனித இனத்தின் தந்தை எனப் போற்றப்படுகின்ற ஹஸரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உங்களது நாட்டு மண்ணில் காலடி எடுத்து வைத்தார். "அவர்கள் இருந்த இடத்தில் இருந்து அவர்களை வெறியேற்றினான். பின்னர் நாம் அவர்களுக்கு இறங்கிச் செல்லுங்கள் எனக் கூறினோம்" என குர்ஆன் அது பற்றி விளக்குகிறது. விந்தை என்னவெனில் பூமிக்கு வந்த மனிதன் முதன் முதலில் கற்றுக் கொண்ட பாடம் இறைவனிடம் பாவமன்னிப்புக் கோரி பிரார்த்தனை செய்வது எப்படி என்பது பற்றித் தான். "ஆதம் தமது இரட்சகனிடம் இருந்து வசனங்களைக் கற்றுக் கொண்டார்." எஜமானுக்கு மாறுசெய்த நிலைமைக்கு அடியான் தள்ளப்பட்டால் எப்படிப் பரிகாரம் தேடுவது என்ற பாடத்தை அவன் கற்றுக் கொள்கிறான்.

இந்த அற்புதம் இந்த சரந்தீப் பூமியில் நடைபெறுகிறது. அவருக்கு வழங்கப்பட்ட பிரார்த்தனையில் நபிகளாரினதும் அவரது திருக் குடும்பத்தினரும் பொருட்டால் மன்னிப்புக் கோருமாறு கற்றுக் கொடுக்கப்பட்டதாக இமாம் சாதிக் அறிவிக்கிறார். அதன் பிரகாரம் நபிகளாரினதும் அன்னாரது அஹ்லுல் பைத்தினரதும் பெயர் முதன் முதலில் இந்த சரந்திப் மண்ணில தான் நினைவூட்டப்படுகிறது.

உங்களுக்கு என் வாழ்த்துக்கள்.